UK Health
Security
Agency

NHS

# உங்கள் குழந்தைக்கான TB மற்றும் BCG தடுப்பூசி



immunisation
the safest way to protect your child

mil_UKHSA_12079_TB BCG 8pp DL leaflet_01-tam.indd 1 25/10/2021 12:08:2

**இந்தத் துண்டுப்பிரசுரம், உங்கள் குழந்தையைக் காசநோயிலிருந்து (TB) காப்பாற்றுவதற்குத் தரப்படும் BCG (Bacillus Calmette-Guerin) தடுப்பூசி மருந்து பற்றியதாகும்.**

## BCG தடுப்பூசி என்றால் என்ன?

BCG தடுப்பூசியில் TB -ஐ உண்டாக்கும் பாக்டீரியாவின் (கிருமி) பலவீனமான வடிவம் இருக்கிறது. இது பலவீனமாக இருக்கும் காரணத்தால், இந்த கிருமியால் காசநோய் ஏற்படாது, ஆனால் ஒருவேளை உங்கள் குழந்தைக்கு TB பாதிப்பு ஏற்படும் பட்சத்தில் அதிலிருந்து பாதுகாப்பை (நோய் எதிர்ப்புச் சக்தி) ஏற்படுத்த இது உதவுகிறது.

BCG தடுப்பூசியானது குறிப்பாகக் குழந்தைகள் மற்றும் சிறுவர், சிறுமிகளுக்கு TB யின் அரிதான கடுமையான வடிவங்களான TB மூளைக்காய்ச்சல் (மூளையின் புறணி வீக்கம்) ஆகியவற்றிலிருந்து பாதுகாப்பதில் உதவியாக இருக்கிறது.

## TB என்றால் என்ன?

TB என்பது ஒரு பாக்டீரியா தொற்று ஆகும்; இது பொதுவாக நுரையீரலைப் பாதிக்கும் என்றாலும் உடலின் எந்தப் பகுதியிலும் பாதிப்பை ஏற்படுத்தலாம். TB நுண்ணுயிரித் தொற்று ஏற்பட்டால் அது TB நோயாக இல்லாமலும் போகலாம். உடலில் TB நோயானது மெதுவாக படிப்படியாக பாதிப்பை ஏற்படுத்தும். அதற்கான அறிகுறிகள் தோன்ற பல மாதங்கள் ஆகும்.

TB நோய்த்தொற்று ஏற்பட்ட அனைவருக்கும் ஒருபோதும் காசநோய் ஏற்படாது. அவர்களின் உடலில், TB கிருமி வாழ்நாள் முழுவதும் செயலற்றதாக இருக்கும். மற்றவர்களுக்கு (உதாரணமாக, நோய் எதிர்ப்பு சக்தி குறைவாக இருப்பவர்களுக்கு), காசநோய் கிருமி செயல்திறன் மிக்கதாக இருந்து அது TB நோயை ஏற்படுத்தலாம். நம் நாட்டில், TB ஏற்பட்ட பெரும்பாலான மக்கள் சிகிச்சைக்கு பின்னர் பூரணமாக குணமடைகிறார்கள், ஆனால் அதற்கு பல மாதங்கள் ஆகலாம்.



mil_UKHSA_12079_TB BCG 8pp DL leaflet_01-tam.indd 2 25/10/2021 12:08:2

## TB -க்கான அறிகுறிகள் என்ன?

TB உடலின் எந்த பாகத்தையும் பாதிக்கலாம். நோய்க்கான அறிகுறிகள் மாறுபடும், குழந்தையின் நோய்க்கான அறிகுறிகள் பெரியவர்களிடமிருந்து வேறுபட்டிருக்கலாம். TB பரவக்கூடியதாக இருப்பதால், வேறு ஒருவர் இதனால் பாதிக்கப்பட்டிருப்பதை நீங்கள் அடையாளம் கண்டு கொள்வது முக்கியம் ஆகும்.

கீழ்க்கண்ட அறிகுறிகள் உங்களுக்கோ, உங்கள் குழந்தைக்கோ, அல்லது உங்கள் குடும்பத்தில் இருப்பவருக்கோ அல்லது நண்பர்களுக்கோ இருந்தால், நீங்கள் உடனே ஒரு மருத்துவரை தொடர்பு கொள்ள வேண்டும்:

- 2 வாரங்களுக்கு மேல் நீடிக்கும் தொடர்ச்சியான இருமல்
- காய்ச்சல்
- குறிப்பாக இரவு நேரத்தில் வியர்த்தல்
- காரணம் இல்லாமல் எடை குறைதல்
- குழந்தைகளுக்கு எடை அதிகரிப்பதில் சிக்கல்
- எப்போதும் உடல்நிலை சரியில்லாமல் சோர்வாக இருப்பது போன்ற உணர்வு ஏற்படுதல்
- இருமும் போது இரத்தம் வருதல்

## TB தொற்று எவ்வாறு ஏற்படுகிறது?

நுரையீரல் அல்லது தொண்டை ஏற்கனவே பாதிக்கப்பட்டு இருக்கும் நபர் இருமும் போது வெளிவரும் கிருமிகளால் நமக்கு TB ஏற்படலாம். அவர்கள் இருமும் போது, பாக்டீரியாவைக் கொண்டிருக்கும் சிறிய நீர்த் துளிகள் வெளியில் தெளிக்கப்படுகின்றன. அந்த நீர்த் துளிகளை யாராவது சுவாசித்தால் அவர்களுக்கும் நோய்த்தொற்று ஏற்படலாம். நோயால் பாதிக்கப்பட்ட நபருடன் ஒரு அறையை பகிர்ந்து கொள்ளும் போது, உதாரணமாக ஒரே வீட்டில் வசிப்பதால் தொற்று ஏற்படும் அபாயம் அதிகமாக உள்ளது.



mil_UKHSA_12079_TB BCG 8pp DL leaflet_01-tam.indd 3 25/10/2021 12:08:2

## TB பரவல் எவ்வளவு பொதுவானது?

ஐக்கிய ராஜ்ஜியத்தில், 1950-களில் ஒவ்வோராண்டும் 50,000 பேர் புதிதாகத் தொற்றுக்கு உள்ளாகினர். இன்று, இந்த எண்ணிக்கை ஒரு ஆண்டிற்கு 5,000 என்ற அளவில் குறைந்துள்ளது. ஆகவே, உங்களுக்குத் தொற்று ஏற்படும் சாத்தியம் இல்லை எனலாம். அதே வேளையில் TB -இன் அறிகுறிகளை ஒவ்வொருவரும் அறிந்திருத்தல் அவசியம்.

TB என்பது உலகளவில் பரவலான நோயாக இருப்பதால் இது பற்றித் தெரிந்து கொள்வது மிகவும் முக்கியமானது.

TB -ஆல் அதிக மக்கள் பாதிக்கப்பட்டுள்ள நாடுகளில் வசிப்பவர்களுக்கு அல்லது வேலை செய்பவர்களுக்கு அந்த நோய் ஏற்படுவதற்கான ஆபத்து மிக அதிகம். இத்தகைய குடும்பங்களைச் சேர்ந்த பிள்ளைகள், தமது சமூகத்தில் உள்ள தொற்றுக்குள்ளான உறுப்பினர்களுடன், ஐக்கிய இராஜ்ஜியத்திலேயோ, சொந்த நாட்டிலேயோ, நெருங்கிய தொடர்பு கொள்ளும் சாத்தியமும் கூடுதலாக இருக்கும்.

## என் குழந்தைக்கு BCG தடுப்பூசி ஏன் போட வேண்டும்?

மற்ற நாடுகளை போலவே, ஐக்கிய ராஜ்ஜியத்திலும் TB உள்ள ஒருவருடன் பழகும் குழந்தைகளுக்கு BCG தடுப்பூசி வழங்கப்படுகிறது. அதிக TB பாதிப்பு உள்ள பகுதியில் வசிக்கும் குழந்தைகள் அல்லது அதிக TB உள்ள நாட்டில் இருக்கும் பெற்றோர்கள் அல்லது தாத்தா பாட்டிகளுடன் இருக்கும் குழந்தைகள் (மேலும் தகவலுக்குப் பக்கம் 7 ஐப் பார்க்கவும்) இதில் அடங்குவர்.

## என் குழந்தைக்கு எப்படி தடுப்பூசி போடப்படுகிறது?

உங்கள் குழந்தையின் இடது புஜத்தின் மேற்புறத்தில் BCG நோய்த் தடுப்பூசி மருந்து ஏற்றப்படும்.

குழந்தை பிறந்த உடனேயே இந்த தடுப்பூசி போடப்படுகிறது, பொதுவாகப் பிறந்த 28 நாட்களுக்குள் போடப்படும்.



mil_UKHSA_12079_TB BCG 8pp DL leaflet_01-tam.indd 4 25/10/2021 12:08:2

## இந்த தடுப்பூசி போடுவதால் ஏதேனும் பக்க விளைவுகள் ஏற்படுமா?

தடுப்பூசி போட்ட உடனேயே, லேசான கொப்புளம் தோன்றும். தடுப்பூசி சரியாக போடப்பட்டுள்ளது என்பதை இது காட்டுகிறது.

ஊசி போட்ட இரண்டு முதல் ஆறு வாரங்களுக்குள் அந்த இடத்தில் ஒரு சிறிய புள்ளி தோன்றும். இது சில நாட்களுக்கு புண்ணாக இருக்கலாம், ஆனால் அதை அப்படியே விட்டுவிட்டால் அது தானாகவே படிப்படியாகக் குணமாகி விடும். குணமான பிறகு அந்த இடத்தில் ஒரு சிறிய வடு ஏற்படலாம். இது சாதாரணமானது தான்.

எப்போதாவது, உங்கள் குழந்தைக்கு, ஊசி போட்ட இடத்தில் ஆழமற்ற புண் ஏற்படலாம். அந்த புண்ணிலிருந்து திரவம் கசிந்தால் அது காயும் வரை ஒரு உலர்வான துணி கொண்டு கட்ட வேண்டும் – ஒருபோதும் பிளாஸ்டர் - பயன்படுத்தக் கூடாது. இந்தப் புண் ஆறுவதற்கு பல மாதங்கள் ஆகலாம்.

உங்களுக்குக் கவலை ஏற்பட்டால் அல்லது புண்ணில் தொற்று ஏற்பட்டிருக்கலாம் என்று நினைத்தால் உங்கள் மருத்துவரைப் பார்க்கவும்.





mil_UKHSA_12079_TB BCG 8pp DL leaflet_01-tam.indd 5 25/10/2021 12:08:2

## என்னுடைய குழந்தைக்கு BCG தடுப்பூசி போடாமல் இருப்பதற்கு ஏதேனும் காரணங்கள் உள்ளதா?

மற்ற தடுப்பூசிகளைப் போலவே, இந்த ஊசி போடப்படாமல் இருப்பதற்கும் அல்லது தாமதப்படுத்தப்படுவதற்கும் காரணங்களாவன:

- உங்கள் குழந்தைக்கு அதிக காய்ச்சல் இருந்தால்
- உங்கள் குழந்தை பொதுவான தோல் நோயால் பாதிக்கப்பட்டிருந்தால். (எக்ஸிமா இருந்தால், தோல் புண்கள் இல்லாத ஒரு ஊசி தளம் தேர்ந்தெடுக்கப்படும்)

அரிதாக, பலவீனமான நோய் எதிர்ப்பு சக்தியில்லாத குழந்தைகளில், தடுப்பூசியில் உள்ள பாக்டீரியாக்கள் கடுமையான தொற்றுநோயை ஏற்படுத்தும்.

உங்கள் குழந்தைக்கு பலவீனமான நோய்எதிர்ப்பு சக்தி இருந்தால் அல்லது அவ்வாறு இருப்பதாக சந்தேகிக்கப்பட்டால் நீங்கள் உங்களது செவிலியர் அல்லது மருத்துவரிடம் அதைப் பற்றி சொல்வது மிகவும் முக்கியம். உதாரணத்திற்கு:

- புற்றுநோய் அல்லது பிற தீவிர நோய்க்கான சிகிச்சையைக் குழந்தை பெற்று வந்தால்
- கர்ப்பத்தில் குழந்தையின் தாய்க்கு நோய்எதிர்ப்பு சக்தி கொண்ட உயிரியல் சிகிச்சை இருந்தால்
- நோயெதிர்ப்பு மண்டலத்துடன் பிரச்சினைகள் இருக்கக்கூடிய குடும்ப வரலாறு இருந்தால் (e.g HIV, கடுமையான ஒருங்கிணைந்த நோயெதிர்ப்பு குறைபாடு SCID)
- SCID இருக்கக்கூடிய அல்லது பாதிக்கப்பட்டிருக்கிற குழந்தைகள்





mil_UKHSA_12079_TB BCG 8pp DL leaflet_01-tam.indd 6 25/10/2021 12:08:2

## எந்தக் குழந்தைகளுக்கு BCG தேவை

அனைத்து குழந்தைகளுக்கும் BCG வழங்கப்படும் பகுதியில் நீங்கள் வசிக்காவிட்டாலும் உங்கள் குழந்தைக்கு தடுப்பூசி தேவைப்படலாம்.

பின்வரும் கேள்விகளில் எவற்றுக்கும் '**ஆம்**' என்று பதில் அளிப்பீர்களானால், நீங்கள் உங்கள் மருத்துவர் அல்லது செவிலியரிடம் உங்கள் குழந்தைக்கு BCG வழங்குவது பற்றிக் கேட்க வேண்டும்.

- உங்கள் குழந்தை, குழந்தையின் தாய், தந்தை, பாட்டன், பாட்டி அல்லது உங்களுடன் வசித்துவரும் எவரும் TB உயர்ந்த விகிதத்தில் உள்ள ஒரு நாட்டில் இருந்து வந்தவர்களா?
- நீங்களோ அல்லது உங்கள் குழந்தையோ இந்த நாடுகளில் தங்கி இருந்தீர்களா அல்லது உங்களது நண்பர்கள் மற்றும் குடும்பத்தினருடன் தங்கப் போகிறீர்களா?
- உங்களுடன் வாழ்ந்து கொண்டிருக்கும் அல்லது உங்கள் குழந்தையுடன் அதிக நேரம் செலவழிக்கும் யாருக்கும் இப்போது TB இருக்கிறதா அல்லது சமீபகாலத்தில் TB இருந்ததா?

உயர்ந்த விகிதங்களில் TB நிலவும் நாடுகளின் புள்ளி விபரங்கள் பின்வரும் உலக சுகாதார அமைப்பின் (WHO) இணையத் தளத்திலிருந்து எடுக்கப்பட்டன:

**www.gov.uk/government/publications/tuberculosis-tb-by-country-rates-per-100000-people**





mil_UKHSA_12079_TB BCG 8pp DL leaflet_01-tam.indd 7 25/10/2021 12:08:2

## வேறு எதனையும் நான் அறிய வேண்டுமா?

BCG எப்போது போடப்பட்டது என்பதை கருத்தில் கொள்ளாமல் உங்கள் குழந்தைக்கு 8 வார வயதில் வழக்கமான தடுப்பூசிகளை ஆரம்பிக்கலாம். BCG போடப்பட்ட கையில் குறைந்தது 3 மாதங்களுக்கு உங்கள் குழந்தைக்கு வேறொரு ஊசியும் போடப்படாமல் இருப்பதை உறுதி செய்ய வேண்டும்; இல்லையெனில் அந்த பகுதியில் உள்ள சுரப்பிகள் வீங்கக் கூடும்.




எதிர்கால குறிப்புக்காக உங்கள் குழந்தையின் தனிப்பட்ட குழந்தை சுகாதார பதிவேட்டில் (சிவப்பு புத்தகம்) BCG தடுப்பூசியின் பதிவு இருப்பதை நீங்கள் உறுதிப்படுத்திக் கொள்ளுங்கள்.

## மேலதிக தகவல்கள்

TB, அல்லது BCG தடுப்பூசி அல்லது வேறு ஏதேனும் தடுப்பூசிகள் பற்றிய கூடுதல் தகவலை நீங்கள் தெரிந்து கொள்ள விரும்பினால், உங்கள் மருத்துவர், சுகாதார பார்வையாளர், பேறுகால உதவியாளர் அல்லது செவிலியரிடம் பேசுங்கள்; அல்லது **www.nhs.uk/conditions/vaccinations/ bcg-tuberculosis-tb-vaccine/** ஐப் பார்வையிடுங்கள்.

**நினைவில் கொள்க, TB சிகிச்சைக்கு நீண்ட காலம் ஆகும் அதனைத் தடுப்பதோ மிக இலகுவானது.**

NHS

© Crown copyright 2021
2021SCTBTA Tamil 75 2p Sept 2021 (APS).
மேலும் பிரதிகள் ஆர்டர் செய்ய தயவுசெய்து ஹெல்த் பப்ளிக்கேஷன்ஸைப் பார்வையிடவும்
**www.healthpublications.gov.uk**
அல்லது கீழ்க்காணும் எண்ணில் அழைக்கவும்: 0300 123 1002, 0300 123 1003 (காலை 8 மணி முதல் மாலை 6 மணி வரை, திங்கள் முதல் வெள்ளி வரை).

**www.nhs.uk/vaccinations**

mil_UKHSA_12079_TB BCG 8pp DL leaflet_01-tam.indd 8 25/10/2021 12:08:2